VETRI

# வள்ளலார் வாக்கில் கடவுள் கட்டளை

## சன்மார்க்கம் அறிவோம் - பாடம் 4

தொகுப்பு

முனைவர் வை. நமசிவாயம், VETRI

வெளியீடு

வள்ளலார் யூனிவர்சல் மிஷன், U.S.A

மற்றும்

வள்ளலார் கல்விப்  பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம், வடலூர் (VETRI)

# Contents

வள்ளலார் வாக்கில் கடவுள் கட்டளை ........ 3
1. மனிதப் பிறப்பின் குறிக்கோள் ........ 3
2. கடவுள் கட்டளை 1 ........ 3
3. கடவுள் கட்டளை 2 ........ 4
4. கடவுள் கட்டளை 3 ........ 4
5. கடவுள் கட்டளை 4 ........ 5
6. கடவுள் கட்டளை 5 ........ 5
7. கடவுள் கட்டளை 6 ........ 5
8. கடவுள் கட்டளை 7 ........ 7
9. கடவுள் கட்டளை 8 ........ 8
10. கடவுள் கட்டளை 9 ........ 9
11. சீவகாருண்யத்தின் பலன் செய்தவரைச் சேரும் வேறிடத்திற்கு போகாது 10
12. சீவகாருண்யம் செய்பவர் யாவராலும் வணங்கத் தக்கச் சிறப்புடையவர் ........ 10
13. சீவகாருணிய ஒழுக்கத்தைப் பின்பற்றி வாழ்பவரே கடவுளை அறிவால் அறிந்து கடவுள் மயம் ஆவார்கள் ........ 10
14. சீவகாருணியம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும்; அதனால் உபகாரசத்தி விளங்கும்; அந்த உபகாரசத்தியால் எல்லா நன்மைகளுந் தோன்றும். ........ 10

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# வள்ளலார் வாக்கில் கடவுள் கட்டளை

## 1. மனிதப் பிறப்பின் குறிக்கோள்

**உலகத்தில் மனிதப்பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்மலாபத்தைக் காலமுள்ள போதே அறிந்து அடையவேண்டும்.**

- **ஜீவகாருண்ய ஒழுக்கம்**

- ஆன்மலாபம் = கடவுளின் இயற்கை இன்பம் = பேரின்பம் = இயற்கை உண்மை தனிப் பெருஞ்சுகம்
- அருளால் அடையக்கூடும்
- அருளை சீவகாருண்ய ஒழுக்கத்தினால் அடையக்கூடும்

## 2. கடவுள் கட்டளை 1

**சீவர்களெல்லாம் தேகங்களிலிருந்து அபாயங்களை நீக்கி ஆன்மலாபத்தைப் பெறுதற்கு முயற்சி செய்யக் கடவர்**

- **ஜீவகாருண்ய ஒழுக்கம்**

- ஆன்மாக்கள் ஜீவர்களாகி அதிகரிக்க மனித தேகம் அவசியம்
- தேகங்களுக்கு அடிக்கடி அபாயம் நேரிடும்
- அவற்றைத் தடுக்க மனிதர்களுக்கு கடவுள் சுதந்திரம் அளித்துள்ளார்
- அதைக் கொண்டு அபாயங்களை நீக்க வேண்டும்
- நீக்கி ஆன்மலாபம் பெற முயற்சி செய்ய வேண்டும்

## 3. கடவுள் கட்டளை 2

ஊழ் வகையாலும் அஜாக்கிரதையாலும் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை என்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்து கொள்ளமாட்டாமல் வருந்துகின்ற சீவர்கள் விஷயத்தில் அவைகளை நிவர்த்தி செய்விக்க வேண்டுமென்றும்

- ஜீவகாருண்ய ஒழுக்கம்

-

- ஊழ்வகையாலும் கவனமின்மையாலும் அபாயங்கள் வரும். அவை ஏழு வகைப்படும்
- அவற்றை உணரும் அறிவும், நீக்கும் தன் உரிமைச் செயலும் உடையவர் தயவால் நீக்க வேண்டும்

## 4. கடவுள் கட்டளை 3

ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் அன்னிய சீவர்களுக்கு நேரிடுகிற அபாயங்களை நிவர்த்தி செய்விப்பதற்குத் தக்க சுதந்தரமும் அறிவு மிருந்தும் அவ்வாறு செய்யாமல் வஞ்சித்தவர்களுக்கு இவ்வுலக இன்பத்தோடு மோக்ஷ இன்பத்தை யனுபவிக்கின்ற சுதந்தரம் அருளாலடையப் படுவதில்லை

- ஜீவகாருண்ய ஒழுக்கம்

- வஞ்சித்தவர்கள் = கண்டு, கேட்டு, உணர்ந்து; காலம், பொருள், உழைப்பு பெற்றிருந்தும்; தடை இல்லாதிருந்தும் செய்யாதவர்கள்
- இவ்வுலக இன்பம் = இம்மை இன்ப வாழ்வு (ஜீவகாருண்ய ஒழுக்கம் - பிரிவு 2)
- மோட்ச இன்பம் = எக்காலத்தும் அழியாத இன்பம்

சீவகாருணியம் என்கின்ற திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழவேண்டும்

- ஜீவகாருண்ய ஒழுக்கம்

## 5. கடவுள் கட்டளை 4

**4. தற்காலத்தில் அனுபவிக்கின்ற புவன போக சுதந்தரங்களையும் இழந்து விடுவரென்றும் கடவுள் வேதத்தில் விதித்திருக்கின்றபடியால்**

**- ஜீவகாருண்ய ஒழுக்கம்**

- புவனம் = வசிக்கும் இடம் / ஊர் / நாடு
- போகம் = ஐம்புல இன்பம்

## 6. கடவுள் கட்டளை 5

**தங்கள் முயற்சியாலும் அறிவாலும் சுதந்தரத்தாலும் சம்பாதிக்கின்ற, ஆகாமிய ஆகாரத்தாலும் பசியை நீக்கித் தேகத்தை வைத்திருக்க வேண்டுமாதலாலும், ஆகாயமியத்தால் சம்பாதிக்கின்ற சீவசுதந்தரம் மனிதர்களுக்கு அருளால் மிகவுங் கொடுக்கப்பட்ட படியாலும்! ஊழ்வகையால் ஆகாரம் நேரிடாமல் பசித்து வருந்தும்படியாகவும்; அந்தப் பசியை நீக்கும் நிமித்தம் ஒருவரையொருவர் எதிர்பார்க்கும் படியாகவும்; அவர் தயவினால் ஆகாரங் கொடுத்து அப்பசியை நீக்கி அவரை நன்முயற்சியிற் செலுத்தவும் ஆகாரங் கொடுத்தவர் சித்திமுத்திகளை யடையவும் அருள் நியதியாக விதிக்கப்பட்ட படியாலும்**

**- ஜீவகாருண்ய ஒழுக்கம்**

## 7. கடவுள் கட்டளை 6

**மனிதர்கள் மாத்திரம் பசியாற்றுவிக்கின்ற சீவகாருணிய விதியைப் பொதுவில் அவசியம் உறுதியாகப் பிடிக்கவேண்டுமென்றும் கடவுள் விதித்திருக்கின்ற படியால்**

\- ஜீவகாருண்ய ஒழுக்கம்

**மனிதர்கள் மாத்திரம் என்பதற்கு வள்ளலார் கூறும் 14 காரணங்களை காண்க**

1. மனிதர்களில் ஆண்மக்கள் பெண்மக்கள் என்றிருவகைப்பட்ட எல்லா மனிதர்களுக்கும் பசியால் வரும் நஷ்டங்களும் துன்பங்களும் பசி நிவர்த்தியால் வரும் லாபங்களும் இன்பங்களும் பொதுவில் ஒரு தன்மையாயிருத்தலாலும்,
2. பசியால் வரும் நஷ்டங்களையுந் துன்பங்களையும் மன முதலான அந்தக்கரண விருத்தியினாலும்
3. கண் முதலான இந்திரியங்களாலும் மிகவும் அறிந்து கொள்கின்ற ஆன்ம அறிவு ஒத்திருத்தலாலும்,
4. மனிதர்களுக்கு ஊழ்வகையினால் அருள் நியதியின்படி கொடுப்பிக்கின்ற ஆகாரமட்டில் சீவித்துத் தேகத்தை வைத்திருக்கக் கூடாமையாலும்,
5. தங்கள் முயற்சியாலும் அறிவாலும் சுதந்தரத்தாலும் சம்பாதிக்கின்ற, ஆகாமிய ஆகாரத்தாலும் பசியை நீக்கித் தேகத்தை வைத்திருக்க வேண்டுமாதலாலும்,
6. ஆகாயமியத்தால் சம்பாதிக்கின்ற சீவசுதந்தரம் மனிதர்களுக்கு அருளால் மிகவுங் கொடுக்கப்பட்ட படியாலும்!
7. ஊழ்வகையால் ஆகாரம் நேரிடாமல் பசித்து வருந்தும்படியாகவும்;
8. அந்தப் பசியை நீக்கும் நிமித்தம் ஒருவரையொருவர் எதிர்பார்க்கும் படியாகவும்;
9. அவர் தயவினால் ஆகாரங் கொடுத்து அப்பசியை நீக்கி அவரை நன்முயற்சியிற் செலுத்தவும் ஆகாரங் கொடுத்தவர் சித்திமுத்திகளை யடையவும் அருள் நியதியாக விதிக்கப்பட்ட படியாலும்,
10. மனிததேகம் மற்றச் சீவதேகம்போல இலேசிலே எடுக்கக் கூடாதாகலாலும்,
11. மனித தேகத்தில்ஆன்மவிளக்கமும் அருள் விளக்கமும் மிகவும் விளங்குதலாலும்,
12. இந்த மனித தேகம் போனால் மீளவும் இந்தத் தேகம்வருமென்கிற நிச்சய மில்லாமையாலும்,

**13.இந்த மனித தேகம் முத்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாதலாலும்,**
**14.இந்த மனிததேக மாத்திரமே முதற் சிருஷ்டி தொடங்கிக் கடவுள் சம்மதத்தால் சிருஷ்டிக்கப்பட்ட உயர்ந்த அறிவையுடைய தேகமாதலாலும்**

**- ஜீவகாருண்ய ஒழுக்கம்**

## 8. கடவுள் கட்டளை 7

**மனிதர்கள் பிராரத்தப்படி நியதி ஆகாரத்தைப் புசித்துப் பிராரத்த அனுபவத்தை நீக்கிக் கொண்டு, ஆகாமியத்தால் முயற்சி ஆகாரத்தைப் புசித்துக் கரணேந்திரிய தேகத்தை வலுவுள்ளதாகச் செய்து கொண்டு, சன்மார்க்க சாதனத்தை அனுசரித்துச் சித்தி முத்தி இன்பங்களைப் பெறக்கடவரென்று கடவுள் விதித்திருக்கின்றபடியால்**

**- ஜீவகாருண்ய ஒழுக்கம்**

**பிராரத்தம் = நுகர்வினை, ஊழ்வினை**
**ஆகாமியம் = வருவினை, மேல்வினை**
**சஞ்சிதம் = பழவினை, தொல்வினை**
**சன்மார்க்க சாதனம் = பிற உயிர்க்கு உதவுதல், உண்மையை அறிதல் (பரோபகாரம், சத்விசாரம் - உபதேச குறிப்பு 101)**

### உபதேச குறிப்பு 101 - சுத்த சன்மார்க்க சாதனம்

**சுத்த சன்மார்க்க சாதனம் 2 வகைப்படும்: பரோபகாரம், சத்விசாரம், பரோபகாரம் என்பது தேகத்தாலும், வாக்காலும், திரவியத்தாலும் உபகாரஞ் செய்வது. சத்விசாரம் என்பது நேரிடாத பக்ஷத்தில் ஆன்மநேய சம்பந்தமான தயாவிசாரத்தோடு இருப்பது. கடவுளது புகழை விசாரித்தல், ஆன்மாவின் உண்மையை விசாரித்தல், தன் சிறுமையைக் கடவுளிடத்தில் விண்ணப்பித்தல்.**

## 9. கடவுள் கட்டளை 8

இவ்வகை முழுதும் சீவ காருணியமேயாதலால் எல்லா உயிர்களிடத்தும் சீவ காருணியம் வேண்டுமென்று கடவுளால் ஆணைசெய்ததென்று அறியவேண்டும்.

9.1 சீவகாருணிய ஒழுக்கத்தில் முக்கியமாக எல்லா மனிதர்களுக்கும் பொதுவில் பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்து ஆகாரத்தினால் திருப்தி இன்பத்தை உண்டுபண்ண வேண்டு மென்றும்,

9.2 பசியைப்போல் வேறு வகையினால் சீவகொலை நேரிடுவதானால் அந்தச் சீவகொலையைத் தம்மாற் கூடிய வரையில் எவ்விதத்திலாயினும் தடை செய்து உயிர் பெறுவித்துச் சந்தோஷ'ப்பிக்க வேண்டுமென்றும்,

9.3 பிணி பயம் முதலிய மற்ற ஏதுக்களால் சீவர்களுக்குத் துன்பம் நேரிடில் அத்துன்பங்கள் தங்களால் நீக்கத்தக்கவை களாகில் நீக்கவேண்டுமென்றும்,

9.4 மிருகம் பறவை ஊர்வன தாவரம் முதலியன சீவர்களிடத்துப் பயத்தினால் வருந் துன்பத்தையும் கொலையினால் வருந் துன்பத்தையும் எவ்விதத்தும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும்,

9.5 அவற்றுள் துஷ்ட சீவர்களிடத்தும் சிறிது பயத்தினால் வருந் துன்பம் மாத்திரமே யல்லது கொலையினால் வருந்துன்பங்களைச் செய்யப்படாதென்றும்,

இவ்வகை முழுதும் சீவ காருணியமேயாதலால் எல்லா உயிர்களிடத்தும் சீவ காருணியம் வேண்டுமென்று கடவுளால் ஆணைசெய்ததென்று அறியவேண்டும்.

- ஜீவகாருண்ய ஒழுக்கம்

**6-110-131 ஆறாம் திருமுறை / தனித் திருஅலங்கல்**

உயிரெலாம் ஒருநீ திருநடம் புரியும்
ஒருதிருப் பொதுஎன அறிந்தேன்
செயிரெலாம் தவிர்ந்தேன் திருவெலாம் அடைந்தேன்
சித்தெலாம் வல்லதொன் றறிந்தேன்

மயிரெலாம் புளகித் துளமெலாம் கனிந்து
மலர்ந்தனன் சுத்தசன் மார்க்கப்
பயிரெலாம் தழைக்கப் பதியெலாம் களிக்கப்
பாடுகின் றேன்பொதுப் பாட்டே.

### சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்

அங்ஙனம் செய்வித்ததுமன்றி, உலகியற்கண் பொன்விஷய இச்சை பெண்விஷய இச்சை மண்விஷய இச்சை முதலிய எவ்விஷய இச்சைகளிலும் என் அறிவை ஓரணுத்துணையும் பற்றுவிக்காமல் எல்லா உயிர்களையும் பொதுமையில் நோக்கி எல்லா உயிர்களும் இன்பமடைதல் வேண்டுமென்னும் கருணை நன்முயற்சியைப் பெறுவித்துச் சுத்த சன்மார்க்கத் தனிநெறி ஒன்றையே பற்றுவித்து எக்காலத்தும் நாசமடையாத சுத்ததேகம் பிரணவதேகம் ஞானதேகம் என்னும் சாகாக் கலானுப தேகங்களும்

### 6-002-973. அருட்பெருஞ்ஜோதி அகவல்

உயிரெலாம் பொதுவி னுளம்பட நோக்குக
செயிரெலாம் விடுகெனச் செப்பிய சிவமே

### 6-002-1590. அருட்பெருஞ்ஜோதி அகவல்

உலகினி லுயிர்களுக் குறுமிடை யூறெலாம்
விலகநீ யடைந்து விலக்குக மகிழ்க

## 10. கடவுள் கட்டளை 9

சீவகாருண்ய ஒழுக்கமாகிய மேலான விரதமானது தேவர்கள், மனிதர்கள், பிரமசாரிகள், சமுசாரிகள், தவசிகள், சந்நியாசிகள், ஆண்சாதியர், பெண்சாதியர், வார்த்திபர், வாலிபர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் முதலிய யாவராலும் அவசியம் செய்யத்தக்க தென்பது கடவுளாணை யென்றறிய வேண்டும்

**11. சீவகாருண்யத்தின் பலன் செய்தவரைச் சேரும் வேறிடத்திற்கு போகாது**

**12. சீவகாருண்யம் செய்பவர் யாவராலும் வணங்கத் தக்கச் சிறப்புடையவர்**

**13. சீவகாருணிய ஒழுக்கத்தைப் பின்பற்றி வாழ்பவரே கடவுளை அறிவால் அறிந்து கடவுள் மயம் ஆவார்கள்**

**14. சீவகாருணியம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும்; அதனால் உபகாரசத்தி விளங்கும்; அந்த உபகாரசத்தியால் எல்லா நன்மைகளுந் தோன்றும்.**

**6-116-10 ஆறாம் திருமுறை / பந்தாடல்**

ஈரமும் அன்பும்கொண் டின்னருள் பெற்றேன்
என்மார்க்கம் இறவாத சன்மார்க்கம் தோழி
காரமும் மிகுபுளிச் சாரமும் துவர்ப்பும்
கைப்போடே உப்போடே கசப்போடே கூட்டி
ஊரமு துண்டுநீ ஒழியாதே அந்தோ
ஊழிதோ றூழியும் உலவாமை நல்கும்
ஆரமு துண்டென்னோ டாடேடி பந்து
அருட்பெருஞ் சோதிகண் டாடேடி பந்து. ஆடேடி

**15. இதனால், அறிவு விளங்கிய சீவர்களுக்கெல்லாம் சீவகாருணியமே கடவுள் வழிபாடு என்றும் அறியப்படும்.**

**16. தங்கள் தங்கள் வருவாய்க்குத் தக்க வரையில் செல்வந்தர்கள் பிறர் பசி நீக்குதல் வேண்டும்**

- நடுத்தர வருவாய் உடையவர்கள் தமது குடும்பச் செலவை கூடியமட்டில் சிக்கனஞ் செய்து பிறர் பசி தீர்க்க வேண்டும்

- குடும்பம் மட்டுமே பசியாற்றிக் கொள்ளத் தக்க குறைந்த வருவாய் உடையவர்கள் மற்றவர்கள் மூலமாய் பிறர் பசி நீக்க தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்
- பெருமைக்காக திருமணம், மகப்பேறு, தெய்வம் படைத்தல் முதலிய செய்கைகளில் செலவழிப்பதை தவிர்த்து பசித்திருப்போர் பசி நீக்குதல் வேண்டும்

## 17. சீவகாருணியமென்கின்ற மோட்ச வீட்டுத் திறவுகோலை காலமுள்ள போதே சம்பாதித்துக் கொள்ள வேண்டும்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

திருவருட் பிரகாச வள்ளலார் திவ்ய திருவடிகளே சரணம் ! சரணம் ! சரணம் !

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
வள்ளல் மலரடி வாழ்க வாழ்க !